KB14-2-1-TE

# இயேசுவே மேசியா என்பதை உறுதிபடுத்திடும் 16 தீர்க்கதரிசனங்கள் - பாகம் 2 - நிகழ்ச்சி 1

**அறிவிப்பாளர்**: இன்றைக்கு கூhன் அன்கர்பர்க் நிகர்;ச்சியில்.: இந்த ப{மிக்கு விசெசூpத்த நபரான மெசியாவை அனுப்ப பொவதாக தெவன் ஏற்கனவெ தமது தீர்க்கதரிசிகள் ஷலம் பல வருட';களுக்கு முன்பாகவெ டிசால்லியிருக்கிறாரா, குறிப்பாக என்ன தீர்க்கதரிசன';களை டிகாடுத்திருக்கிறார், எபிரெய வெதத்தில் எந்த பகுதிகளில் அந்த வார்த்தைகள் இருக்கிறது, அந்த தீர்க்கதரிசன';கள் உரைக்கப்பட்ட ய{த கூன';கள் வரப்பொகிற மெசியாவைக் குறித்து டிசால்லப்பட்ட குறிப்பான வார்த்தைகளை பஜரிந்துடிகாண்டார்களா, இந்த டிசய்திடிதாடரில் நாம் சுமார் 16 தீர்க்கதரிசன வார்த்தைகளை பார்த்திடலாம் ஆதாம் முதல் ஆபிரகாம் வரை.: மொசெ முதல் தாவீது வரை.: ஏசாயா முதல் தானியெல் சகரியா வரை. நாம் கெட்கலாம்.: இந்த மறுக்க முழயாத தீர்க்கதரிசன';கள் இயெசு தான் மெசியா என்பதை நிருபித்துள்ளதா,

எனது முதல் விருந்தினர் டாக்டர். வால்டர் டிபய்சர். அவர் இப்பொதுள்ள இறையியல் மெதைகளில் ஒருவர் மற்றும் இன்றைக்கு அடிமரிக்காவில் எபிரெய பத வசன';களின் வெத வல்லுநர். டாக்டர் டிகய்சர் முதன்மை தலைவரும் பிரசித்தடிபற்ற

பர்ய ஏற்ப்பாட்டு விரிவஜரையாளராகவஜம் கார்டன் - கான்டிவல் இறையியல் டிசமினரி ஞாமில்டனில் இருக்கிறார்.ஃ மா!;காவ்டிசட்!;. இரண்டாவதாக.ஃ டாக்டர் டெரல் பாக். அவரும் நிகர்;கால இறையியல் வல்லுநர்களில் ஒருவர் பஜதிய ஏற்ப்பாட்டு வல்லுநராக இருக்கிறார். அவர் பஜதிய ஏற்பாட்டு ஆராய்ச்சியில் முதன்மை ஆராய்ச்சி விரிவஜரையாளராக இருக்கிறார் பாரம்பரிய கலாச்சார அமைப்பின் ஒரு';கிணைப்பாளராக டாலா!; இறையியல் டிசமினரியில் இருக்கிறார் டாலா!;.ஃ டிடக்சா!;. இந்த விசெஞூpத்த நிகர்;ச்சியில் இணைந்திடு';கள் கூhன் அன்கர்பர்க் நிகர்;ச்சி.

*****

**டாக்டர். ஜான் அன்கெர்பெர்க்**: நிகழ்ச்சிக்கு உங்களை வரவேற்கிறோம். நான் ஜான் அன்கர்பர்க் மேலும் என்னோடு இரண்டு விசேஷித்த விருந்தினர்கள் இருக்கிறார்கள், டாக்டர் வால்டர் கெய்சர் மற்றும் டாக்டர் டேரல் பாக். இந்த மிகமுக்கியமான கேள்வியின் ஆராய்ச்சியில் கலந்துகொள்ளுங்கள்: வரப்போகும் மேசியாவைக் குறித்து மறுக்கமுடியாத தீர்க்கதரிசனங்கள் எபிரேயத்தில் சொல்லப்பட்டுள்ளதா? இந்த நபர் யார்? அவர் இயேசு கிறிஸ்துவா? இதற்கு முன்பு தேவன் யூதமக்களுக்கு கெர்டுத்த வாக்குத்தத்தங்களை நாம் பார்த்தோம் அவை சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்பாக பழைய ஏற்ப்பாட்டு வசனங்களில் பதிக்கப்பட்டிருக்கிறது. அந்த காலத்தில் வாழ்ந்த மக்களுக்கு சொல்லப்பட்ட வாக்குத்தத்தமும் இந்த தீர்க்கதரிசனத்தில் அடங்கியுள்ளது, அவர்களுடைய சந்ததி மற்றும் அவர்கள் தேசத்தை

பற்றிய வாக்குத்தத்தம், எதிர்காலத்தில் தேவனுடைய மேசியாவை அடையாளம் காண தேவையான தகவல்களும் கொடுக்கப்பட்டது.

இப்போது துரிதமாக அவ்றறை பார்க்க நினைக்கிறேன் அவற்றை உங்களுக்காக திரையில் போடுகிறோம் அதன் பிறகு இவர்கள் மேற்கொண்டு பேசுவார்கள். முதலில், நாம் ஏதேன் தோட்டத்தில் தேவ்ன ஆதாமிடமும் ஏவாளிடமும் ஸ்திரீயின் வித்தானவர் ஒருநாள் சாத்தானின் தலையை நசுக்குவார் என்று சொன்னார் என பார்த்தோம் ஆதியாகமம் 3:15. அடுத்து நோவா தேவன் வந்து சேமின் கூடாரங்களில் குடியிருப்பார் என்று தீர்க்கதரிசனம் உரைத்தான், சேமின் வசம்சம், ஆதியாகமம் 9:27. அதன்பிறகு தேவன் கொடுத்த வாக்குறுதி ஆபிரகாமின் சந்ததியிலிருந்து தோன்றுபவரால் இந்த பூமியின் ஜாதிகள் எல்லாம் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும் என்றார், ஆதியாகமம் 22:18.

அந்த வாக்குத்தத்தங்கள் அனைத்தும் ஈசாக்கின் சந்ததி வழியாய் வந்தது, இஸ்மவேல் அல்ல, எனவே ஆபிரகாமின் ஒரு சந்ததி விளக்கப்பட்டது, இதை ஆதியாகமம் 26:2-4ல் பார்க்கிறோம். அதன்பிறது யாக்கோபின் வழியாய் வாக்குத்தத்தம் வந்ததே தவிற, ஏசா அல்ல, இங்கும் ஈசாக்கின் சந்ததியில் ஒன்று விளக்கப்படுகிறது, இதை ஆதியாகமம் 28:13-14ல் பார்க்கிறோம். பிறகு மேலான தீர்க்கதரிசனமான உபாகமம் 18 15ல் தேவன் ஒருநாளில் மோசேயைப் போல ஒரு தீர்க்கதரிசியை எழும்பப்பண்ணுவேன் என்கிறார். அங்கு தமது ஜனங்களையும் அவர் எச்சரிக்கிறார், “என்

நாமத்தினாலே அவர் உங்களுக்கு சொல்லும் வார்த்தைகளுக்கு செவிகொடாதவன் எவனோ நான் அவனை விசாரிப்பேன்."

அடுத்தாக தாவீதின் வம்சத்திலிருந்து மேசியா வருவார் என்றும் அவருடைய ராஜாசனம் என்றென்றைக்கு நிலைபெற்றிருக்கும் என்றும் தேவன் வெளிப்படுத்துகிறார், 2 சாமுவேல் 7:11-16. சங்கீதம் 110 -4ல் கர்த்தர் தாவீதின் ஆண்டவரை நோக்கி, அவர் யாரென பார்த்தோம், "நான் உமது சத்துருக்களை உமக்கு பாதபடியாக்கிப்போடும் வரை என் வலதுபாரிசத்தில் உட்காரும் என்றார்." தாவீதினுடைய ஆண்டவர் யார்? அவர் எப்படி எதிர்காலத்தில் தாவீதின் குமாரன் என்றழைக்கப்படுவார்? தேவன் இந்த வசனங்களில் அவர் சீயோனிலிருந்து ஆளுகை செய்வார் அவர் நித்திய ஆசாரியராயிருப்பார் என்றும் சொல்கிறார். அதன்பிறகு சுமார் கிமு 740ல் ஏசாயா தீர்க்கதரிசி ஏசாயா 9:6-7ல் சொல்லியிருக்கும் தீர்க்கதரிசனம் நமக்கு ஒரு பாலகன் பிறந்தார் அவர் நாமம் அதிசயமானவர் ஆலோசனை கர்த்தா வல்லமையுள்ள தேவன் நித்திய பிதா சமாதானப்பிரபு எனப்படும்.

சரி, இப்ப, சொல்லப்பட்ட காரியங்களை வைத்து, யார் இந்த மேசியா என்ற தெளிவு உங்களுக்கு உண்டாயிருக்கிறமா? சரி, இல்லையென்றால், இந்த புதிரை கண்டறிய இன்னும் சில தீர்க்கதரிசனங்களை அதோடு இணைத்து, முழுமையான விடையை பார்த்திடலாம். இதைத்தான் தேவன் பழையஏற்ப்பாட்டில் செய்திருக்கிறார். ஒருசில தீர்க்கதரிசன வார்த்தையில் ஆரம்பித்து அது அதிகமாகிக்கொண்டே போகிறது, அப்போது உண்மையான

தரிசனம் இன்னும் அதிக தெளிவு பெறுகிறது. இந்த நபர் எதிர்காலத்தில் வரப்போவதாக தேவன் சொல்கிறார். அவரைக் காண காத்திருங்கள்! அவரை எதிர்ப்பார்த்திருங்கள்!

சரி, டாக்டர் கெய்சர், நாம் ஏசாயா 52 மற்றும் 53ம் அதிகாரங்களை பார்த்துக்கொண்டிருந்தோம், அதை பார்க்க தவறியவர்கள் புரிந்துகொள்ளும்படி கடந்த வாரங்களில் பேசியதை சுருக்கமாக விளக்கி சொல்லுங்கள். அதன்பிறகு இன்றைக்கு நாம் பேச இருக்க தீர்க்கதரிசன வார்த்தையை பார்த்திடலாம், தேவன் தம்முடைய தாசன் நம்முடைய அக்கிரமங்களுக்காக நொறுக்கப்படுவார் என்பதை முன்னறிவித்திருக்கிறார். நம்முடைய மீறுதல்களுக்காக அவர் காயப்படுவார் மேல் கர்த்தர் நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர் மேல் விழப்பண்ணினார். நேகிழச்செய்யும் வார்த்தைகள் சொல்லப்பட்டுள்ளது, ஆனால் இப்போது தேவனுடைய தாசனைக்குறித்து இதுவரை பார்த்ததை சொல்லுங்கள்.

டாக்டர். வால்டர் கெய்சர்: சரி, ஜான், இது எபிரேய வேத வாக்கியத்தில் மறுக்கமுடியாத மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாக இருக்கிறது. இதன் எபிரேய மொழியில் ஞாபகப்படுத்தி பார்க்கவேண்டும், எபிரேயத்தில் உணர்ச்சியை வெளிப்படுத்தும் வார்த்தை சொல்லப்பட்டுள்ளது, “ஹின்னே” “இதோ, பார், கவனி! கேளுங்கள்! செவிகொடு, இதை கவனி! ஏன்னா என் தாசன் ஜெயம் பெறுவார். அவர் ஞானமாய் நடப்பார்.” இந்த அதிகாரத்தை நாம் பார்க்கும்போது அவர் பயப்படவேண்டாம் என்கிறார், அஞ்சவேண்டாம் என்கிறார், ஏனெனில் அவர் ஜெயம்பெறுவார்.

அதன் பிறகு அவர் ஏசாயா 52 வசனம் 13, பின்பு வசனம் 14 மற்றும் 15தையும் ஒப்பிட்டுக் காட்டுகிறார். “அநேகர் என்று,” வசனம் 14லிலும், “அநேகம் ஜாதிகள், என்று வேறு கூட்டத்தை, வசனம் 15ல் சொல்கிறார். இதை இப்படியும் சொல்லலாம், அதாவது மேசியாவின் முதல் வருகையை கூறுவதோடு, இந்த பகுதியில் என் தாசன் என்னப்படுபவருடைய வருகையை பற்றியும் கூறுகிறது, தேவனுடைய ஊழியக்காரர். முழு வேதாகமத்திலும் மேசியாவைக் குறித்து பிரசித்தப்படுத்தி கூறும் வாக்கியம், “தேவனுடைய தாசன் என்பதாகும்.”

அவர் இங்கு என்ன சொல்லுகிறார்? அவர், அடிக்கப்பட்டு கோரமான விதத்தில் சிலுவையின் மரணத்திற்குட்படுத்தப்பட்டதை பார்த்த அநேகர் ஸ்தம்பித்து ஒன்றும் பேசமுடியாத அளவிற்கு பிரமித்துபோனார்கள், எதற்காக அப்படி செய்தனர்? ஏன் அப்படி செய்யும்படி அவர்களை அனுமதித்தார்? அதன் பிறகு அவர் சொல்லும் போது, அநேகம் ஜாதிகள் என்று கூறுகிறார், அது தேசங்களை குறிக்கிறதா. அது ஜனங்களை மட்டும் குறிப்பிடவில்லை. இந்த பூமியில் தெரிந்தெடுக்கப்பட்ட ஒரு கூட்டத்தினர் மட்டுமல்ல. ராஜாக்கள் பிரபுக்கள் ஆளுநர்கள் ஜனாதிபதிகளும் அடங்கும். அவர்கள் சொல்லும் காரியம், “என் வாயை மூடிக்கொள்கிறேன்.” அவர்கள் தங்களுக்கு தெரிவிக்கப்படாதிருந்ததை காண்பார்கள். தாங்கள் இதுவரை கேள்விப்படாதிருந்ததை அவர்கள் அறிந்துகொள்வார்கள்.

சரி, இதை தொடர்ந்து அவர் 53 அதிகாரத்திற்கு வருகிறார். 53ம் அதிகாரத்தில் மறுபடியும் அவர், “இதோ,” ஏ, ஏ, இத கவனி. “இதோ, என் தாசன்,” என்று சொல்கிறார், “இவர் மனிதரால் புறக்கணிக்கப்படுவார்” என்கிறார் இது தாசன் யாரென்ற இரகசியத்தை வெளிப்படுத்துகிறது, 52ம் அதிகாரத்தில் இவை, வசனங்களுக்குள் மறைந்திருந்தது. இப்போது அவருடைய புறக்கணிப்பை பார்க்கிறோம்.

அவர் தமது கேள்வியேர்டு தொடங்குகிறார் “எங்களுடைய அறிக்கையை விசுவாசித்தவன் யார்?” 53ம் அதிகாரம். “கர்த்தருடைய புயம் யாருக்கு வெளிப்பட்டது,அவருடைய பெலன், வல்லமை யாருக்கு வெளிப்பட்டது? இங்க பேக்கிங் சோடாவ உதாரணத்துக்கு பயன்படுத்தலாம். அதுதான் அவருடைய புயம், அதை கொஞ்சமா கேக்ல சேர்த்தவுடன், உப்பி, பெரிதாகிவிடும். அதைதான் சொல்கிறார்,” தேவனுடைய வல்லமையும் பராக்கிரமமும் அப்படியாயிருக்கும். அவர் வறண்ட நிலத்திலிருந்து துளிர்க்கிற வேரைப் போலிருந்தார்.” ஜனங்கள் அவரை, “ஆ, அவர் ஒரு நாட்டுப்புறத்தான். ஒன்றுமில்லாததிலிருந்து வந்தவன். ஆவரை விரும்பத்தக்க ரூபம் அவருக்கு கிடையாது. அசட்டைபண்ணப்பட்டு மனிதர்களால் புறக்கணிக்கப்பட்டார், துக்கம் நிறைந்தவன், பாடு அநுபவிக்கிறவர்கள் வேதனையும் வியாகுலமும் உடையவர். எப்படியிருந்தாலும், நமது முகத்தை அவருக்கு மறைத்துக்கொண்டோம். அவரை பார்ப்பதற்கும் அவர்கள் தாயாராக

இல்லை என்றனர்.” அதுதான் புறக்கணிப்பு. அதுதான் முழுமையான புறக்கணிப்பின் நிலை!

இப்ப நாம் அந்த மூன்றாவது குறிப்பை பார்க்கலாம், அதுதான் அவருடைய பாவ நிவாரண பலி. இந்த காரியங்களுடைய மையப்பகுதிக்கு வந்திருக்கிறோம். அவர் ஏன் இப்படி செய்தார் என்பதை கூறுகிறது. “மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டார். நம்முடைய துக்கங்களைச் சுமந்தார்.” அப்படியிருந்தும், நாம ஏ அத யோசிக்கல? அதைப் பற்றி சிந்திக்காமல் நாமோ, “ஆ, அவர் நிச்சயம் ஏதோ தவறு செய்திருப்பார், அதனால் தேவனால் வாதிக்கப்பட்டு, சிறுமைப்படுகிறார் என்று எண்ணினோம்.” இந்த வேத பகுதி கூறுகிறது, “அதை நாம் உணரவில்லை. அவர் முழுவதுமாய் நொறுக்கப்பட்டார்,” எதற்காக தெரியுமா? “நம்முடைய அக்கிரமங்களுக்காக. நம்முடைய மீறுதல்கள் நிமித்தம் அவர் காயப்பட்டார். அந்த தண்டனையின் பிரம்பு, நமக்கு சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர் மேல் வந்தது. அவருடைய தழும்புகளால், அவருடைய காயங்களால், நாம் குணமாகிறோம்.”

இப்போது வசனம் 6, இந்த அதிகாரத்தில் விசேஷமான வசனம் இதுதான், “நாமெல்லாரும் ஆடுகளைப்போல வழிதப்பி போனோம்.” ஒரு ஆடு தன்னுடைய சுயமாக போக தீர்மானித்திடும் என்பதை, அறிந்துதான் அதற்கு மேய்ப்பர்களை நிறுத்துகிறார்கள். ஜனங்களும் அதைப்போல தான் இருக்கிறார்கள். அதனால்தான் தேவன் சொல்கிறார், “இதுதான் வழி, இதிலே நடங்கள் என்கிறார்.” அதற்கு

நாம், “இல்லை, என்னுடைய விருப்பப்படி போவேன், என்னுடைய இஷ்டப்படி செய்வேன் என்கிறோம். இது சுதந்திரமுள்ள நாடு எனக்கு தைரியம் இருக்கிறது அதனால் நான், எனக்கு இஷ்டமான திசையில் போவேன் என்கிறோம்.” இந்த வேதபகுதி கூறுகிறது, “நோ, நோ, நாம் ஒவ்வொருவரும் நம்முடைய வழியை விட்டு விலகினவர்களாக இருக்கிறோம்.” நம்முடைய மேய்ப்பன் காட்டும் வழியை விட்டு விலகினதோடு, நமக்கு தொன்றின வழியையயும் நாம் விட்டுவிட்டோம். “கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தை, நியாயத்தீர்ப்பை, மீறுதலை அவர் மேல் விழப்பண்ணினார். அவர் அதை ஏற்றுக்கொண்டார். அதை ஏற்றுக்கொண்டார்.” நாம் இந்த இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள நிச்சயம் முன்வரவேண்டும், இந்த மேசியா, நம்முடைய பாவங்களை சுமந்துகொண்டார்.

அவரால் உண்டாக்கப்பட்ட இந்த அண்டசராசரமும் மக்களும், அவரால் உருவாக்கப்பட்டவர், எப்படி அவரை விட்டு விலகிப்போய் தங்கள் வழியை நடக்க நினைத்தனர், அவர் தேவன் பக்கமாய் திரும்ப எப்படி மறந்தனர், “கர்த்தராகிய இயேசுவே, நீர் என்னுடைய சமாதானம். நீர் தான் எனக்கு பாடுகளை ஏற்றுக்கொண்டவர், என் இருதயத்தின் ஆழத்திலிருந்து நன்றி சொல்கிறேன் என சொல்லவில்லையே.” அதனால் தான் இந்த செய்தியினுடைய மையமாக இந்த 6ம் வசனம் அமைந்திருக்கிறது. “நாமெல்லாரும் ஆடுகளைப்போல வழிதப்பி போனோம், கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தை அவர்மேல் விழப்பண்ணினார்.” அவர் எவ்வளவு, அருமையான இரட்சகர்! இந்த கேள்விக்கு பதில்

கொடுக்கதான நாம் பிறந்திருக்கிறோம். எல்லா மனிதர்களும், எந்த நாடாக இருந்தாலும் சரி, எந்த தேசம், எங்கிருந்து வந்தாலும் சரி, கேள்வி இதுதான்: கர்த்தராகிய இயேசுவைக் குறித்து நம்முடைய எண்ணம் என்ன, மேசியாவாகிய, இரட்சகர் யார்? நமக்காக மரித்தவர் இவர்தான் என நம்புகிறோமா? நம்முடைய அக்கிரமத்தை அவர் சுமந்தார். நாம் செய்யNவுண்டிய ஒரே செயல் அவரை நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும். ஒரு பரிசை பெறுவதுபோல தான். நாம் செய்ய வேண்டிய காரியம் இதுதான் கைகளை உயர்த்தி, “உம்மை, பெற்றுக்கொள்கிறேன்.” ஆமா, ஜான், இதுதான் சுவிசேஷத்தின் மையமாக இருக்கிறது.

**ஆன்கர்பெர்க்:** தட்ஸ் கிரேட். இப்போது ஒரு இடைவேளை எடுத்துக்கொள்வோம். நாம் திரும்பி வந்ததும் டாக்டர் டேரல் பேசுவார் புதிய ஏற்பாட்டின் சில புத்தகங்களைப் பற்றி உலகிலே பிரசித்திபெற்ற தொகுப்பாளர்களில் இவரும் ஒருவர். மேலும் நம்முடைய தேசத்திலுள்ள சில தொலைகாட்சி வலைதளங்களில் சில, ஏபிசி போன்றவை வுhந Pயளளழைn ழக வாந ஊhசளைவ பற்றி பேட்டி கண்டனர், இவர் அந்த படத்தின் ஆலோசகராக மட்டுமின்றி, அந்த படமானது வார்த்தைகளின் அடிப்படையில் இருக்கிறதா என்ற இறையியல் சம்பந்தமான அனைத்து கேள்விகளுக்கும் பதிலளிப்பவராக இருந்தார். எனவே இந்த வார்த்தைகளைப் பற்றி நாமும் அறிந்துகொள்ளவேண்டும் என விரும்புகிறேன், “நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அடிக்கப்பட்டார்,” “நம்முடைய மீறுதல்கள் நிமித்தம் அவர்

காயப்பட்டார்” இதை தொடர்ந்து பார்க்கும்படியாக விரும்புகிறேன். இயேசுவைப் பற்றிய இயைனத்தும் உண்மையா? வேறு வார்த்தையில் சொன்னால், இவையனைத்தும் கர்த்தராகிய இயேசுவை சித்தரிக்கிறதா? நாம் திரும்ப வந்ததும் இவைகளைப் பற்றிதான் பேசப்போகிறோம்.

*****

**ஆன்கர்பெர்க்**: ஆல்ரைட், மீண்டும் வருக. நம்முடன் இருப்பவர்கள் டாக்டர் வால்டர் கெய்சர் மற்றும் டாக்டர் டேரல் பாக். சரி, டாக்டர். பாக், இப்ப நீங்க சொல்லுங்கள். நீங்க இந்த தீர்க்கதரிசனங்களப் பார்க்கும்போது, அதாவது ஏசாயா 53ம் அதிகாரம், இவை யூதர்களுடைய வசனங்கள், ஆல்ரைட். நீங்க வுhந Pயளளழைn ழக வாந ஊhசளைவ படத்தின் ஆலோசகராக இருந்தீங்க. நீங்க கட்டுரைகளும் எழுதியிருக்கீங்க. வழக்கமா வலைதளங்கள் கிறிஸ்தவ இறையியல் பற்றிய கேள்விகளை, கிறிஸ்தவ இறையியல் நிருபுனர்களிடம், கேட்கும்போது நீங்க அவங்க செட்லதான இருந்திருப்பீங்க. இந்த வார்த்தைகளைப் பற்றி நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். “நம்முடைய அக்கிரமங்களுக்காக அவர் அடிக்கப்பட்டார்.” “நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டார்.” “நமக்கு சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது.” “நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் தேவ்ன அவர்மேல் விழப்பண்ணினார்.” இந்த வார்த்தைகளில் நீங்கள் என்ன கற்றுக்கொண்டீர்கள் என சொல்லுங்கள்.

**டாக்டர். டேரல் பாக:** சரி, இங்கு எதை பிரதிபளிக்கும்படியாக நாம் வந்திருக்கிறோம், நிச்சயம், இயேசுவின் சிலுவை மரணத்தை பற்றிதான். சிலுவை மரணத்தை ரோம அதிகாரிகள் ஒரு மிகப்பெரிய அழுத்தத்தினால் நிறைவேற்ற வேண்டியிருந்தனர், யூத மத தலைவர்களின் கட்டாயத்தால் வந்த இழுத்தம். சிலுவை மரணமானது முற்றிலும் கொடூரமானது சகிக்க முடியாத மரணமாகும். இதைப்பற்றி, யூத வரலாற்றாசிரியர்கள் எழுதியிருக்கிறார்கள் அது எவ்வளவு கொடுமை, என்பதை எடுத்துக்கூறுகிறார்கள். சில பேரரசர்கள் சொல்லியிருக்கிறார்கள், "அதில் இருக்கும் வேதனையை நாங்கள் பார்க்க விரும்பவில்லை." உண்மையில் இது கொடூரமான மரணம் தான். அதாவது ரோம பிரஜைகள் சிலுவை மரண தண்டனைக்கு விலக்கப்பட்டிருக்கிறார்கள். இது ஒரு மிகப்பெரிய வேதனை நிறைந்த மரணம் என்பதை அறிகிறோம். இது மிகவும் வேதனை நிறைந்தது மெல் கிப்சன் தி பேஷன் ஆஃப் கிரைஸ்டில் வெளிப்படுத்த முயற்சித்து சதைகள் பிய்ந்து போகும்படியாக காண்பித்ததைவிட அதிகமானது. அதனுடைய படபிடிப்பில் நானும் கூட இருந்தேன் அவர்கள் அந்த இரத்தத்தை மற்றும் சிலுவையிலறைப்புடுவதைப் பற்றிய காட்சிகளை முன்னே நேர்த்தியாக கிராபிக்ஸ் மூலம் தயார்படுத்தியிருந்தனர், அது கிராபிக்சாக இருந்தாலும், மிகவும் தத்ரூபமாக எடுக்கப்பட்டிருந்தது. நேயர்களில் சிலர் கெர்டுமையின் தாக்கத்தை குறைத்துக்கொள்ள முடியுமா என்றனர். அந்த கேள்விக்காக எனது பதில், "குறைக்கவே

வேண்டாம். இது நினைப்பதைவிட கொடுமையான மரணம். சிலுவை மரணத்தில் இருக்கும் வேதனையை மக்கள் நிச்சயம் புரிந்துகொள்ள வேண்டும். இயேசு அதை சகித்தார். நமது சார்பில் அந்த பாடுகளை அவர் ஏற்றுக்கொண்டார்.

எதற்காக அப்படி செய்தார்? கறைகளை முற்றிலுமாக அகற்றி சுத்தமாக்குமு;படியாகவா. இல்லை. பல சமயங்களில் நாம் பாவம் மன்னிக்கப்படுவதையும் பாவத்திற்கு மரிப்பதையும் குறித்து பேசும்போது, நாம் நினைக்கிறோம், ஓ. என்னுடைய அழுக்கெல்லாம் கழுவப்பட்டு நான் புதிய ஆரம்பத்தை பெற வேண்டும் என்கிறோம். இல்லை, அதற்கு மேலாக விஷயங்கள் இருக்கிறது. ஏனென்றால் அந்த பாவ மன்னிப்பை பெறுவதோடு நம் வாழ்வில் தேவனுடைய பெலத்தையும், அவர் பிரசன்னத்தையும் பெறுகிறோம். அவருடைய ஆவியை நமக்கு கொடுக்கிறார். அதுதான் நற்செய்தியின் முக்கிய திறவுகோள், நாம் தேவனுடைய ஆவியை பெற்றுக்கொள்கிறோம் அவர் நம்மை தேவனோடு நடக்கும்படிக்கு பெலப்படுத்துகிறார், செயலற்ற ஜடங்களாக இல்லாமல், வழிதப்பி போகும் ஆடுகளாய் இல்லாதபடி நம்மை காக்கிறார்.

எனக்கு, ஞாபகமிருக்கு ஒருமுறை நா ஸ்காட்லாந்துல வயல்ள நடந்துபோயிட்டிருந்தப்ப ஒரு ஆட்டை நேருக்கு நேராக பார்த்தேன். அதுவும் நானம் மட்டும்தா, முகத்துக்கு முன்னால. நாங்க ஒரு குறுகலான பாதையை கடக்க வேண்டியிருந்தது. அது எனக்கு முன்னால வந்துட்டிருந்தது. நான் அது நேரா போனேன். யார் ஒதுங்கப்போறது? என்னோட வாழ்க்கையில முதல் முறையா அப்ப

தான செம்மறியாட்ட பார்க்கிறேன். என்ன செய்வதென்று எனக்கு தெரியல. ஆதனால நா அதோட கண்ணப்பார்த்து என்னோட முழுபெலத்தோட சத்தமா கத்தினேன், "பூ" உடனே அது விலகிடுச்சு. அது ஓடிப்போயிடுச்சு. என்னோட வழி க்ளியர் ஆயிடுச்சு, அதனால நான் போயிட்டேன்.

அப்படி தா. நாம ஓடுறோம். தேவனுடைய வழியைவிட்டு நாம ஓடிப்போகிறோம். தேவன் இயேசுவினுடைய மரணத்தினால் உண்டான மன்னிப்பின் மூலமாக நம்மைசேர்த்துக்கொள்கிறார் என்பதை ஏற்றுக்கொண்டால், நாம் மன்னிப்பைப் பெறுவதோடு மட்டுமின்றி, தேவனுடைய ஈவையும் பெற்றுக்கொண்டு செயலற்றுபோயிருந்த நம்முடைய வாழ்க்கை இனி நாம் சிருஷ்டிக்கப்பட்ட நோக்கத்தை நிறைவேற்றும்படி வாழ தேவையான பெலத்தையும் பெற்றுக்கொள்வோம், நாம் தேவனுடைய சாயலழல் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறோம்.

**ஆன்கர்பெர்க்**: நீங்கள் மிகவும் தேறினவர்கள். உங்களைப்போல இப்படி ஆழமாக கற்றறிந்தவர்களை நான் பார்த்ததில்லை, ஓகே. இந்த வார்த்தைகளைப் பற்றி நீங்கள் கற்றுக்கொண்டவற்றை கேட்கும்போது எனக்கு பொறாமையாக இருக்கிறது. சரி போகட்டும். தேவன் இந்த வார்த்தைகளிலிருந்து உங்களுக்கு வெளிப்படுத்தியதை நீங்கள் மற்றவர்களோடு பகிர்ந்திடலாமே?

**பாக:** வெல், இங்க நாம் பார்க்கவேண்டிய முக்கிய விஷயம் நமது அக்கிரமத்திற்காக அடிக்கபடுதல், நம்முடைய மீறுதல்களுக்காக

காயப்படுதல், நமக்கு சமாதானத்தை கொடுக்கும்படிக்கு ஆக்கினையை ஏற்றுக்கொள்ளுதல். இந்த அடுத்தடுத்து உள்ள நிலையை யோசித்து பாருங்கள். நமக்கு சமாதானத்தை கெர்டும்படிக்கு ஆக்கினை. சரி, பொதுவாக ஒரு தண்டனை சமாதானத்தை கொடுக்கும் என நினைக்க மாட்டோம். அந்த ஆக்கினை வேதனையை உண்டாக்கும் என்று நான் யோசிப்போம். இயேசுவிற்கு அது வேதனையை உண்டாக்கிற்று, நமக்கோ அது சமாதானத்தை கொண்டு வந்தது. இதை நீங்கள் பார்க்கும்போது தேவனுக்கு நமக்கு இடையிலிருந்த தடை விளக்கப்பட்டதுதான் இயேசுவின் பரிசாக இருக்கிறது, டாக்டர் கெய்சர் அதைதான் சொன்னார். நாம் செய்யவேண்டியதெல்லாம் அவரில் நம்பிக்கை உடையவர்களாக அதை அப்படியே ஏற்றுக்கொண்டு, “எனக்கு, நானே உதவ முடியாதென்பதை ஏற்றுக்கொள்கிறேன். நான் ஆவியில் உயிர்பிக்கபட வேண்டியது அவசியம், தேவனே, அது உம்முடைய கரத்தில் இருக்கிறது. நீர் இயேசு கிறிஸ்துவின் மூலமாக என் பாவத்தை மன்னித்து அந்த மன்னிப்பின் மூலமாக உம்மோடு நான் தொடர்பு கொள்ளும்படியான வழியை ஏற்படுத்தி என் ஆவியை உயிர்ப்பிக்கிறீர் என்பதை ஏற்றுக்கொள்கிறேன். அதுதான் எனது தேவை. என்னால் முடியாது. உம்மால் கூடும், தேவனே, அவை என்னால் அல்ல உம்மால் ஆகும் என்பதற்காக நான் மகிழ்ச்சியடைகிறேன் நீர் என்னை விடுவிக்கிறவர் என்பதை அறிந்திருக்கிறேன் என்று சொல்லுங்கள்.”

**ஆன்கர்பெர்க்**: டாக்டர் கெய்சர், யூதர்களாக இருந்த ஆதி கிறிஸ்தவர்கள் எப்படி, அதாவது அப்போஸ்தலர்கள் எப்படி எருசலேமில் இருந்த யூதர்களுக்கு ஏசாயா 53 எடுத்தக்காட்டி, இயேசுவை குறிக்கிறது என்றிருப்பார்கள்?

**கெய்சர்**: இந்த, வசனங்கள் அனைத்தும், ஜான், மிகவும் மறுக்க முடியாத முக்கியமானவைகள். 4,5 மற்றும் 6 பாவநிவாரண பலியை குறிக்கிறது. இதற்கு நாம் ஆங்கில வார்த்தையை கவனிக்கவேண்டும் “தேவனோடு ஒரு - நபராக - இருக்கிறார்” தேவனோடு ஒன்றியிருக்கிறார் என்கிறது. உண்மையில் இதைப் பற்றி கிறிஸ்தவர் 1 கொரிந்தியர் 15ல் வெளிப்படுத்தியிருக்கிறார்கள். “நான் உங்களுக்கு ஒப்புவித்த” பவுல் சொல்கிறார், “பிரதானமாய் ஒப்புவித்ததும்,” முதன்மையான விஷயம், “நான் அடைந்ததும், என்னவென்றால் கிறிஸ்து நம் பாவங்களுக்காக மரித்து, தேவ வாக்கியங்களின்படி,” அவ்h ஏசாயா 53ஐ எடுத்துரைக்கிறார், “அவர் அடக்கம்பண்ணப்பட்டு வேத வாக்கியங்களின்படியாக அவர் மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்து, அவர் கேபாவுக்கும் பின்பு பன்னிருவருக்கும், அதன் பிறகு ஐந்நூறுபேருக்கும் அதிகமான சகோதரருக்கும் தரிசனமானார்.” ரோமரில் சொல்லப்பட்டபடி, “இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக்கொண்டு நீதிமான்களாக்கப்படுகிறார்கள். இதுதான் சாராம்சம், தேவனும் மனிதனும் ஒன்றாவதற்கான வழி.

**ஆன்கர்பெர்க்**: டேரல்?

**பாக:** என்னுடைய முதல் வேத பகுதி 1பேதுரு 2:24. ஐத நான் வாசிக்கிறேன். நாம் பாவங்களுக்கு செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர் தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார். அவருடைய தழும்புகளால் குணமானீர்கள்." இங்கு சொல்லப்பட்டிருப்பது முக்கியமான ஒன்று. அதாவது, ஞானஸ்நானத்தை சுத்திகரிப்பென நீங்கள் நினைத்தால், உங்களுக்கு, தெரியும், சபையார் இதை ஞானஸ்நானத்தின் மூலமாக கொண்டாடுவார்கள், நீங்கள் தண்ணீருக்குள் மூழ்கி எழும்புவீர்கள். அது சுத்திகரிப்பைக் குறிக்கிறது. பலர் இதோடு நின்றுவிடுகிறார்கள். இயேசு என்னுடைய பாவங்களுக்காக மரித்துவிட்டார் அதோடு முடிந்துவிட்டது. ஒருவேளை நீங்கள் தண்ணீருக்குள் முழ்கி எழும்பாமல் போனால் என்ன ஆகும் என்று யோசித்து பாருங்கள். அது நல்ல விஷயமல்ல, ஓகே. பாவத்திற்கு மரிப்பது மட்டும் போதாது, நீதிக்கு பிழைக்க வேண்டும். எனவே இந்த சுத்திகரிப்பானது கழுவுவதோடு மட்டுமின்றி, நம்மை புதுபித்து பெலப்படுத்துகிறது அதுதான் நற்செய்தியை பூரணமாக்கும்.

**ஆன்கர்பெர்க்**: உலகெங்கிலும் இதைப் பார்த்துக்கொண்டிருக்கும் கிறிஸ்தவர்கள் இரட்சிக்கப்படாதவர்களுக்கும் கிறிஸதவரல்லாத நண்பர்களுக்கும் ஏசாயா 53ம் அதிகாரத்தை பயன்படுத்தி பேச முடியுமா?

**கெய்சர்**: சரி, இதை சந்தோஷத்தோடும் ஆனந்தத்தோடும் சொல்லுங்கள் அண்டசராசரத்தின் தேவனானவர் இந்த பூமிக்கு வந்து நாம் ஜீவனடையும்படி தமது ஜீவனைக் கொடுத்தார். மேன், நாம் இதுவரை பெற்றதிலேயே சிறப்பான ஈவைப் பற்றி பேசிக்கொண்டிருக்கிறோம். இது நற்செய்திதான் அதோடு, இந்த நித்தியத்திற்கு நடத்திச் செல்வதாகவும் இருக்கிறது. தேவன் அதை சொல்லியிருக்கிறார் என்ற நம்பிக்கையோடு சந்தோஷமாக அதை அறிவியுங்கள். அவர் அதை செய்து முடிப்பார்.

**ஆன்கர்பெர்க்**: டேரல்?

**பாக:** நாம் பேசிக்கொண்டிருக்கும் அனைத்;தும் ஜீவனுள்ள தேவனோடு தொடர்புபடுத்தியே இருக்கிறது. இது மின்சார தாக்கம் இல்லாத நிலையிலும் மின்சக்தியின் ஆற்றல் அதிகமாக காணப்படும் நிலை போன்றதாகும். ஜீவனுக்குள் நீங்கள் இணைக்கப்பட்டவுடன் ஜீவனைப் பெறுவீர்கள். உண்மையான சாரத்தை பெறுவீர்கள், அதற்கு நீங்கள், ஆயத்தப்படவேண்டும். அதைதான் தேவன் சுவிசேஷங்களில் வழங்கியிருக்கிறார், ஜீவனுள்ள தேவனோடுள்ள உங்கள் உறவை நீங்கள் புதுப்பித்துக்கொள்ள முடியும்.

**ஆன்கர்பெர்க்**: அடுத்த வாரம் ஏசாயா 53ஐ குறித்து பல விஷயங்களைப் பேச இருக்கிறோம் இப்போது நாம் கேட்க போகும் கேள்வி, இந்த தாசனுடைய உயிர்த்தெழுதலைக் குறித்து பார்க்கிறீர்களா, இயேசுவினுடைய உயிர்த்தெழுதலைப் பற்றி

வேதத்தில் இருக்கிறதா? இது ஆர்வமுள்ள தலைப்புதான். அடுத்த நிகழ்ச்சியை காண தவறாதீர்கள்.

*****

எங்களுடைய தொலைக்காட்சி நிகழ்சிகளை காண

இலவச ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சி ஆப்பை பதிவிறக்கம் செய்திடுங்கள்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுகொள்வதற்கான ஜெபம் @JAshow.org

@2014 A.T.R.I.